

சென்னை தலைமைச் செயலகத்தில், நேற்று (10.12.2025) தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு துறை அமைச்சர் சி.வி.கணேசன் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தின் வழியாக தேர்வான இளநிலை வேலை வாய்ப்பு அலுவலர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் அரசு அலுவலர்கள் மற்றும் பயிற்சித்துறை உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### மற்ற மாநிலங்களை ஒப்பிடும்போது

# தமிழ்நாட்டில் மாணவர்கள் இடைநிற்றல் குறைவு!

## மாநிலங்களவையில் – டாக்டர் கனிமொழி என்.வி.என். சோமுவின் கேள்விக்கு ஒன்றிய அரசு பதில்

புதுடெல்லி, டிச.11-

நாட்டில் சமீப ஆண்டுகளாக தொடக்கக் கல்வி மற்றும் உயர்நிலைக் கல்வி கற்கும் மாணவ, மாணவிகளிடையே இடைநிற்றல் அதிகமாக இருக்கிறதா? அதற்கு காரணம் என்ன? அதை சரி செய்ய ஒன்றிய அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் என்ன? என்று மாநிலங்களவையில் தி.மு.க. எம்.பி. டாக்டர் கனிமொழி என்.வி. என். சோமு கேள்வி எழுப்பி இருந்தார்.

இதற்கு ஒன்றிய கல்வித் துறை இணையமைச்சர் ஜெயந்த் சௌத்ரி அளித்த பதில்:

ஒருங்கிணைக்கப்பட்ட கல்வித் தகவல் தொகுப்பில் 2020-21 முதல் 2024-25 வரையிலான ஐந்தாண்டுகால தகவல் மற்றும் தரவுகள்படி, நாடுதழுவிய அளவில் தொடக்கக் கல்வி, உயர் தொடக்கக் கல்வி மற்றும் உயர்நிலைக் கல்வி வரையிலான வகுப்புகளில் மாணவர்கள் இடைநிற்றல் நடந்து கொண்டுதான் இருக்கிறது.



வளர்ந்த மற்றும் பெரிய மாநிலங்களைப் பொறுத்தவரை, தமிழ்நாட்டில் தொடக்க மற்றும் உயர் தொடக்கக் கல்வி பயிலும் மாணவர்களிடையே இடை நிற்றல் என்பது சுமார் 2 சதவிகிதம்தான். சில ஆண்டுகளில் இடைநிற்றலே இல்லை என்ற அளவிலும் தமிழ்நாட்டில் நல்ல சூழல் இருக்கிறது. இதுவே மற்ற மாநிலங்களில் இடைநிற்றல் 8 சதவிகிதம் வரை இருக்கிறது. உயர்நிலைக் கல்வியைப் பொறுத்தவரை, பெரிய மாநிலங்களில் 30 சதவிகிதம் வரை இடைநிற்றல் நடக்கிறது. தமிழகத்தில் இது 6 முதல் 8 சதவிகிதமாக இருக்கிறது.

அதேபோல, பட்டியலின மாணவர்களிடையே இடைநிற்றல் தரவுகளைப் பார்த்தால், மற்ற மாநிலங்களில் 35 சதவிகிதம் வரை இடைநிற்றல் உள்ள நிலையில், தமிழகத்தில் இது 10 சதமாக இருக்கிறது.

கல்வி பொதுப் பட்டியலில் உள்ளது. மிகப் பெரும்பாலான பள்ளிகள் மாநில அரசுகளின் நிர்வாகத்தின் கீழ் வருகின்றன. ஆனாலும் மாநிலங்களுக்கு சமக்ர சிக்ஷா திட்டத்தின் கீழ் நிதி உதவி வழங்கப்படுகிறது. பிரதமரின் போஷன் திட்டத்தின் கீழ் அங்கன்வாடி முதல் எட்டாம் வகுப்பு வரையிலான மாணவர்களுக்கு இலவச உணவு வழங்கப்படுகிறது.

இதுதவிர, இடைநிற்றலை முழுமையாகத் தடுக்கவும் பள்ளியில் சேரும் மாணவர்களின் எண்ணிக்கையை உயர்த்தவும், கூடுதல் பள்ளிகள் திறப்பது, பள்ளிகளின் உட்கட்டமைப்பை பலப்படுத்துவது, பள்ளிகளில் கூடுதல் வசதிகளை ஏற்படுத்துவது, தங்குமிட வசதிகளை அதிகரிப்பது, இலவச தொழிற் பயிற்சி, இலவச புத்தகங்கள், இலவச சீருடை வழங்கவும் தனியாக நிதி உதவி அளிக்கப்படுகிறது. சிறப்பு கவனம் தேவைப்படும் குழந்தைகளுக்கு தனியாக நிதி மற்றும் உபகரண வசதிகளும் ஒன்றிய அரசால் வழங்கப்படுகிறது.

ஒன்றிய புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்கத் துறையின் தரவுகள் மற்றும் வேலைக்கு அமர்த்தப்படுபவர்களின் பின்னணியை ஆராயும் வருடாந்திர அறிக்கையின்படி, பள்ளி செல்லும் குழந்தைகள் இடையிலேயே அதை விட்டுவிடும் நிலைக்கு பல காரணங்கள் உள்ளன.

பெற்றோருக்கு வரும் வருமானம் போதாமல், குழந்தைகள் வேலைக்குச் செல்வது, கல்வியில் ஆர்வம் இல்லாமை, வீட்டுச் சூழல் கல்வி இரண்டையும் ஒருங்கிணைத்து சமாளிக்க முடியாத நிலை, மாணவர்களின் ஆரோக்கிய குறைவு, குழந்தைகளுக்கு கல்வி முக்கியம் என்பதை உணராத பெற்றோர் என பல விஷயங்கள் இந்த இடைநிற்றலுக்கு காரணங்களாக உள்ளன. இவற்றை நிரந்தரமாகக் களைய பல்வேறு அமைச்சகங்கள் மூலமாக தேவையான தொடர் நடவடிக்கைகளை ஒன்றிய அரசு எடுத்து வருகிறது.

இவ்வாறு அமைச்சர் ஜெயந்த் சௌத்ரி பதிலளித்தார்.

### முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாளையொட்டி

# "அன்னம் தரும் அமுதகரம்" 294 வது நாள்!

## திரு.வி.க.நகர் வடக்குப் பகுதியில் உணவு வழங்கப்பட்டது!

சென்னை,டிச.11-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு காலை உணவு வழங்கும் சிறப்புமிகு "அன்னம் தரும் அமுதக்கரங்கள்" மாபெரும் திட்டத்தின் 294 ஆம் நாளான - கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் இனிய பிறந்தநாளை முன்னிட்டு நேற்று (10.12.2025), திரு.வி.க நகர் வடக்கு பகுதி: 1) வட்டம் 71அ, B.S மூர்த்தி நகர், (ஆடு தொட்டி எதிரில்), 2) வட்டம் 71, சாஸ்திரி நகர், குளக்கரை சாலை, சென்னை ஆகிய பகுதிகளில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு வழிகாட்டுதல் படி தமிழ்நாட்டு நலன்களையும், எதிர்காலத்தையும் யாருக்காகவும், எதற்காகவும் விட்டுத்தர மாட்டோம். தமிழ்நாட்டின் உரிமைகளுக்காக ஒன்றுபட்டு போராடுவோம். தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும்



- இதுதான் ஒரே இலக்கு!" என்ற உறுதிமொழியை ஏற்று பொதுமக்களுக்கு காலை உணவு வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் சென்னை பெருகர மேயர் பிரியாராஜன், ப. தாயகம் கவி எம்.எல்.ஏ, செ.தமிழ் வேந்தன். புனிதவதி எத்தி ராஜன், எம்.சரவணன், பி.உதயசங்கர், இரா.வீரமணி, நா.துலுக்காணம், எம்.பெரோஸ்கான், கா.ராஜ்முகமது, திரு. வி.க.நகர் வடக்கு / தெற்கு வட்ட கழக செயலாளர்கள்: பரிமளா சுரேஷ்பாபு, மா.ருத்ரமூர்த்தி, எம்.ஏ. டிக்கா, எம்.இசட். அபோய், எஸ்.புஷ்பராஜ், ஜி.கிருஷ்ணகுமார், எம். தமிம், பொல்லு டி.சுரேஷ் குமார், வி.க.வெங்கடேசன், எஸ்.சசிகுமார், பா.பி. தாஸ், எஸ்.வெங்கடேசன். இத்திட்ட ஒருங்கிணைப்பாளர்கள்: சொ.வேலு, எஸ்.முரளி, பெரம்பூர் ஆர்.ராஜன், கே.ஆர்.அபரஞ்சி, அசோக் ஜெயின், பி.விஜயகுமார், ம.அசோக்குமார், எல்.சம்பத்குமார், க.பா. பிரதீப்குமார் மற்றும் கழக நிர்வாகிகள், கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

### எம்.சபினா ஜாஸ்மீன் தலைமை!

# மலேசிய தளபதி பேரவை சார்பில் காணொலிக் கருத்தரங்கம்!

## சேலம் சுஜாதா சிறப்புரை!

கோலாலம்பூர், டிச.11-

மலேசிய தளபதி பேரவை சார்பில். காணொலி கருத்தரங்கம். எம்.சபினாஜாஸ்மீன். தலைமையில் நடைபெற்றது. அனைத்து மக்களையும். அரவணைத்த முதல்வர். என்கின்ற தலைப்பில். தலைமை கழக பேச்சாளர். சேலம் சுஜாதா. கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.

நிகழ்ச்சியில் பொருளாளர் ஜே. சிவானந்தம், எஸ் எஸ்ஏ, இக்பால்ஷா, நபியுல்லா, வரகனேரி அசாருதீன், ராமகிருஷ்ணன், மணிவண்ணன், சென்னப்பன், பிரபு, தமுமுக, சாதிக் பாஷா, அமானுல்லா, விசிக, அயூப் கான், தன்ராஜ், இந்திய யூனியன் முஸ்லிம் லீக் சாகுல் ஹமீது, ஒருங்கிணைப்பாளர் உமர்சா, துணைச் செயலாளர் முகவை சக்திவேல், அமுல்ராஜ், புதுக்கோட்டை நிஜாம்கான், நாகேந்திரன்,மகளிர் அணி சார்ந்த எம்.இர்பானா, பேகம் எம். இர்பானாஆசிகா, எம்.இப்ராதவ்லத், ஜன்னத்துல் பிர்தவ்ஸ், ஜாஸ்மின் பர்வீன், காவியா, அஞ்சம்மாள், மகாலட்சுமி கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சி ஒருங்கிணைப்பு செயலாளர் ஹச்எம்.ஜெய்னுதீன் மற்றும் ஏராளமான உடன்பிறப்புகள் கலந்து கொண்டனர். நிறைவாக பவனா நன்றி உரையாற்றினார்.



இராயபுரம் சட்டமன்றத் தொகுதியில் அமைந்துள்ள கே.சி. சங்கரலிங்கம் மேல்நிலைப் பள்ளியில், இராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் ஐட்ரீம் இரா.மூர்த்தி 552 மாணவ, மாணவிகளுக்கு, தமிழ்நாடு அரசின் விலையில்லா மிதிவண்டிகள் வழங்கினார். நிகழ்வில் இராயபுரம் கிழக்கு பகுதி செயலாளர் இரா.செந்தில்குமார், வட்டச் செயலாளர் இரா. பாலன், பள்ளியின் தாளாளர், செயலாளர், தலைமை ஆசிரியர், ஆசிரிய பெருமக்கள் மற்றும் மாணவர்கள் உடனிருந்தனர்.

### "என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி" – இன்று


# சென்னை கிழக்கு மாவட்டத்தில் பாகவாரியாக நடைபெறும் கூட்டங்கள்!

## மாவட்டச் செயலாளர் – அமைச்சர் பி.கே.சேகர்பாபு அறிவிப்பு!

சென்னை, டிச.11-

சென்னை கிழக்கு மாவட்டச் செயலாளர் - அமைச்சர் பி.கே. சேகர்பாபு அறிவிப்பு வருமாறு:

கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் 8.12.2025 அன்று என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி என்ற தலைப்பில் காணொலி காட்சி வாயிலாக நடைபெற்ற திமுக மாவட்ட கழக செயலாளர் கூட்டத்தில் எடுக்கப்பட்ட செயல்திட்டத்தின் படி 11.12.2025 வியாழக்கிழமை இன்று சென்னை கிழக்கு மாவட்டத்தில் பாகவாரியாக நடைபெறும் கூட்டங்கள் விவரம்.



**கொளத்தூர் கிழக்கு பகுதி**

மாலை: 4.00 மணி: வட்டம் 66அ, பாகம் 83, இடம்: எண்.14, கிருஷ்ணா நகர் மெயின்ரோடு, பெரவள்ளூர், சென்னை-82.

மாலை: 4.30 மணி: வட்டம் 66அ, பாகம் 84, இடம்: எண்.7, பலராமன் தெரு, வெற்றிநகர், சென்னை-82.

மாலை: 5.00 மணி: வட்டம் 66அ, பாகம் 85, இடம்: எண்.14/23, தட்சிணா மூர்த்தி தெரு, வெற்றி நகர், சென்னை-82.

மாலை: 5.30 மணி: வட்டம் 66அ, பாகம் 86, இடம்: எண்.61B, ராம்நகர் முதல் குறுக்கு தெரு, சென்னை-82.

**கொளத்தூர் மேற்கு பகுதி**

மாலை: 4.00 மணி: வட்டம் 64அ, பாகம் 34, இடம்: 13/33, 34வது தெரு, G.K.M.கானி, சென்னை-82.

மாலை: 4.30 மணி: வட்டம் 65அ, பாகம் 9, இடம்: 10, ராஜன் நகர், 2வது தெரு, கொளத்தூர், சென்னை-99.

மாலை: 5.00 மணி: வட்டம் 66, பாகம் 82, இடம்: யுனைடெட் காலனி, 1வது மெயின் ரோடு, கொளத்தூர், சென்னை-99.

**துறைமுகம் கிழக்கு பகுதி**

மாலை: 4.30 மணி: வட்டம் 56அ, பாகம் 92, 93, 94. இடம்: 121, ராமசாமி தெரு, மண்ணடி, சென்னை-1.

துறைமுகம் மேற்கு பகுதி

மாலை: 4.00 - 5.30 மணி: வட்டம் 57, பாகம் 134,136,147,148 இடம்: ஜட்காபுரம், வால்டாக்ஸ் ரோடு.

**எழும்பூர் வடக்கு பகுதி**

மாலை: 4.00 மணி: வட்டம் 77, பாகம் 38, 39, 44 இடம்: காட்டூர் நல்லமுத்து தெரு, சேட் ஜஸ்வத்தம்மாள் தெரு சந்திப்பு, தட்டாங்குளம்.

எழும்பூர் தெற்கு பகுதி

மாலை: 4.30 மணி: வட்டம் 58, பாகம் 85, 86, 87, 97 இடம்: வீராசாமி தெரு, பெரியமேடு.

**திரு.வி.க.நகர் வடக்கு பகுதி**

மாலை: 4.00 மணி: வட்டம் 72, பாகம் 135, இடம்: 30/6, ஜோசப் தெரு, கன்னிகாபுரம்.

மாலை: 4.30 மணி: வட்டம் 72, பாகம் 136, இடம்: 603, எம்.எஸ்.முத்து நகர், கன்னிகாபுரம்.

மாலை: 5.00 மணி: வட்டம் 72, பாகம் 137, இடம்: 4/2, வெங்கடேசபுரம், 1வது தெரு, கன்னிகாபுரம்.

மாலை: 5.30 மணி: வட்டம் 72, பாகம் 139, இடம்: 30, சத்யவாணி முத்து நகர், கன்னிகாபுரம்

மாலை: 6.00 மணி: வட்டம் 72அ, பாகம் 133, இடம்: எண்.80, நேரு நகர், 6வது தெரு

மாலை: 6.30 மணி: வட்டம் 72அ, பாகம் 144, இடம்: எண்.6, திரு. வி.க.நகர் முதல் தெரு.

மாலை: 7.00 மணி: வட்டம் 72அ, பாகம் 145, இடம்: எண்.41/22, திரு. வி.க.நகர் 4வது தெரு.

மாலை: 7.30 மணி: வட்டம் 72அ, பாகம் 146, இடம்: எண்.41/19, திரு. வி.க.நகர், 7வது தெரு.

மாலை: 8.00 மணி: வட்டம் 72அ, பாகம் 147, இடம்: எண்.63/40, திரு. வி.க.நகர், 8வது தெரு.

**திரு.வி.க.நகர் தெற்கு பகுதி**

மாலை: 4.00 மணி: வட்டம் 73, பாகம் 118, 119, 120

மாலை: 4.30 மணி: வட்டம் 75, பாகம் 45, 46, 47, 48

**வில்லிவாக்கம் கிழக்கு பகுதி**

மாலை: 4.00 மணி: வட்டம் 97அ, பாகம் 157,158,159,160 இடம்: பழனி ஆண்டவர் கோவில் தெரு.

மாலை: 4.30 மணி: வட்டம் 98, பாகம் 217, இடம்: சோமசுந்தரம் 6வது தெரு.

மாலை: 5.00 மணி: வட்டம் 98, பாகம் 218 இடம்: பழனியப்பா முதல் உஜ்ஜினி தெரு.

மாலை: 5.30 மணி: வட்டம் 98, பாகம் 222 இடம்: ரங்கையா தெரு.

**வில்லிவாக்கம் மேற்கு பகுதி**

மாலை: 4.30 மணி: வட்டம் , பாகம் 50,55,61,

மாலை: 5.30 மணி: வட்டம் , பாகம் 14,18,48

மாலை: 6.30 மணி: வட்டம் , பாகம் 27,28,34

**அம்பத்தூர் வடக்கு பகுதி.**

மாலை: 4.00 மணி: வட்டம் 86, பாகம் 208, இடம்: பிள்ளையார் கோவில் தெரு

மாலை: 4.30 மணி: வட்டம் 86, பாகம் 209, இடம்: புது பிள்ளையார் கோவில் தெரு

மாலை: 5.00 மணி: வட்டம் 85, பாகம் 153, இடம்: அம்மன் கோயில் தெரு, எம்.கே.பி.நகர்

மாலை: 5.30 மணி: வட்டம் 85, பாகம் 154, இடம்: எஸ்.எஸ்.மினி ஹால்

மாலை: 6.00 மணி: வட்டம் 81, பாகம் 134, இடம்: பாங்க் ஆப் பரோடா தெரு, வெங்கடாபுரம்.

மாலை: 6.30 மணி: வட்டம் 81, பாகம் 135, இடம்: ஷாப் தெரு, வெங்கடாபுரம்

மாலை: 7.00 மணி: வட்டம் 80, பாகம் 87, இடம்: புதூர், புதிய அண்ணாநகர்

மாலை: 7.30 மணி: வட்டம் 80, பாகம் 88, இடம்: புதூர், குமரன் தெரு

மாலை: 8.00 மணி: வட்டம் 79, பாகம் 7, இடம்: செயிண்ட் தாமஸ் தெரு, எ.கே.எ.நகர்

மாலை: 8.30 மணி: வட்டம் 79அ, பாகம் 103, இடம்: வியாகபுரம் மெயின்ரோடு

**அம்பத்தூர் தெற்கு பகுதி.**

மாலை: 5.00 மணி: வட்டம் 88, பாகம் 269, இடம்: பாலாஜி நகர், பாண்டுரங்கபுரம் சந்திப்பு

மாலை: 5.30 மணி: வட்டம் 88, பாகம் 270, இடம்: அண்ணா அறிவு வளர்ச்சி மன்றம் அருகில்

மாலை: 6.00 மணி: வட்டம் 89, பாகம் 255, இடம்: பெரியார் தெரு, சீனிவாச நகர்

மாலை: 6.00 மணி: வட்டம் 90, பாகம் 300, இடம்: வெல்கன் காலனி, ஏசியாட் காலனி

மாலை: 6.00 மணி: வட்டம் 90, பாகம் 301, இடம்: வெல்கம் காலனி, ஏசியாட் காலனி

மாலை: 6.30 மணி: வட்டம் 89, பாகம் 253, இடம்: நேரு தெரு, சீனிவாச நகர்

மாலை: 6.30 மணி: வட்டம் 87, பாகம் 264, இடம்: பஜனை கோயில் தெரு, பாடி

மாலை: 6.30 மணி: வட்டம் 87, பாகம் 264, இடம்: அயோத்தியம்மன் கோயில் தெரு, பாடி.

**அம்பத்தூர் கிழக்கு பகுதி.**

மாலை: 5.30 மணி: வட்டம் 84, பாகம் 171, இடம்: திருவள்ளுவர் தெரு, வெங்கட்ராமன் நகர், கொரட்டூர், சென்னை-80.

மாலை: 6.00 மணி: வட்டம் 84அ, பாகம் 169, இடம்: பஜனை கோயில் தெரு, பட்டரவாக்கம், சென்னை-93.

மாலை: 6.30 மணி: வட்டம் 82, பாகம் 63, இடம்: பிரிதிவிபாக்கம் 2வது அவென்யு, அம்பத்தூர், சென்னை-53.

மாலை: 7.00 மணி: வட்டம் 82அ, பாகம் 20, இடம்: ஜானகி தெரு, சக்திநகர், அம்பத்தூர், சென்னை-53.

மாலை: 7. 30 மணி: வட்டம் 83அ பாகம் 23, இடம்: முத்தமிழ் நகர் முதல் மெயின்ரோடு, கள்ளிகுப்பம், அம்பத்தூர், சென்னை-53.

மேற்கண்ட பாகங்களில் நடைபெறும் கூட்டங்களில் அந்தந்த தொகுதிக்குட்பட்ட நாடாளுமன்ற / சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமை செயற்குழு உறுப்பினர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், தொகுதி பார்வையாளர்கள், பகுதி செயலாளர்கள், வட்ட செயலாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், மாவட்ட / பகுதி / வட்ட நிர்வாகிகள், பாக பொறுப்பாளர்கள், BLA2, BDA, BLC ஆகியோர் தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

சென்னை கிழக்கு மாவட்டச் செயலாளர் - அமைச்சர் பி.கே.சேகர்பாபு அறிவித்துள்ளார்.

### அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலை! ஜெ.பாலமுருகன் தலைமை!

# அம்பத்தூர் தெற்கு பகுதியில் "மனிதநேய உதயநாள்" மாபெரும் கருத்தரங்கம்!

## டி.ஆர்.பாலு எம்.பி தொடங்கி வைக்கிறார்! சுப.வீரபாண்டியன் – தி.செந்தில்வேல் – கா.இராஜராஜேஸ்வரி சிறப்புரை!

சென்னை, டிச.11-

சென்னை கிழக்கு மாவட்ட திமுக இளைஞர் அணி சார்பில், அம்பத்தூர் தெற்கு பகுதியில், மனித நேய உதயநாளை முன்னிட்டு "உதயம் 26", மக்கள் கட்டிய சூரிய மகுடம்! வரலாற்று வாசலில் எழுந்தது உதயம்! எனும் தலைப்பில், மாபெரும் கருத்தரங்கம் (12.12.2025 - வெள்ளிக்கிழமை) அன்று மாலை 6.00 மணியளவில், சென்னை, பாடி, யாதவாள் தெருவில் நடைபெறுகிறது.

இக்கருத்தரங்கில், சென்னை கிழக்கு மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் ஜெ.பாலமுருகன் தலைமை வகிக்கிறார். சென்னை கிழக்கு மாவட்டக்கழக செயலாளரும், இந்து சமய அறநிலையத்துறை (ம) சென்னை பெருநகர வளர்ச்சிக்குழும அமைச்சர் பி.கே.சேகர்பாபு, ஜோசப்சாமுவேல் எம்.எல்.எ, பி.கே.மூர்த்தி எம்.சி, டி.எஸ்.பி.இராஜகோபால் எம்.சி, எம்.டி. ஆர்.நாகராஜ், வானவில் விஜய், எல்.பி.எப்.மோகன், டாக்டர்.ஏ.பி.பூர்ணிமா, வி.ரமேஷ்(எ)நீலகண்டன் எம்.சி, ஜி.வி.நாகவள்ளி எம்.சி, டாக்டர்.ஜி.சாந்தகுமார் எம்.சி, கு. கிருஷ்ணமூர்த்தி, து.ஆயிரம் முன்னிலை வகிக்கின்றனர்.

பா.ஜெகதீஷ், க. வினோத், எஸ்.தனசேகர், ஜி.ஜெ.பிரபு, ஆர்.டி.சங்கர் நானா, என்.பி.எம்.வசந்த், இரவை.பிரபு, லயன் J.P.R.ரகு, செ.சந்திரசேகர், எஸ்.சௌந்தர்ராஜன்(எ) ராஜா, எஸ்.கே.கோவிந்தன், அ.முத்துகுமரன், சு.பிரசாத்குமார், ச.ஜெகதீஷ், ர.சந்தானகிருஷ்ணன், ர.பாலாஜி, மு.சூர்யா, ஆர். கலாநிதி, கு.கார்த்திக், லோ.திருநாவுக்கரசு, சீ.லோ.சரண்ராஜ், தே. லோகுபிரகாஷ் ஆகியோர் வரவேற்கின்றனர்.

இம்மாபெரும் கருத்தரங்கில் கழகப் பொருளாளர், கழக நாடாளுமன்ற குழுத்தலைவர் டி.ஆர்.பாலு எம்.பி துவக்கி வைத்தும் மற்றும் தலைவர் திராவிடர் இயக்க தமிழர் பேரவை, தலைவர், சமூக நீதி கண்காணிப்புக்குழு சுப.வீர பாண்டியன், மூத்த ஊடகவியலாளர் தி.செந்தில்வேல், கழக பேச்சாளர், கழக ஊடக செய்தி தொடர்பாளர் கா.இராஜராஜேஸ்வரி ஆகியோர் சிறப்புரையாற்றுகின்றனர்.

மேலும் இக்கருத்தரங்கில் பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் பிரியா ராஜன், ப.தாயகம்கவி எம். எல்.எ, அ.வெற்றிஅழகன் எம்.எல்.ஏ, பி.முனியாண்டி. மாநில நிர்வாகிகள்: ப.ரங்கநாதன் MLA, கே.சந்துரு, சி. மகேஷ்குமார், கே.எஸ்.இரவிச்சந்திரன் Ex.MLA, சங்கரி நாராயணன் Ex.MLA

தமிழன்பிரசன்னா, எஸ். மணிமுடி, வே.உமாகாந்த், ம.அசோக்குமார் எல்.சம்பத்குமார் கா.ராஜ்முகமது இரா.வீரமணி. அம்பத்தூர் தொகுதி மாமன்ற உறுப்பினர்கள் எம்.இ.சேகர் எம்.சி, எஸ்.உமா MC கே.பொற்கொடி மற்றும் கழக நிர்வாகிகள், கழக மூத்த முன்னோடிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

இக்கருத்தரங்கில் வட்ட கழக செயலாளர் த.பிரகாஷ்குமார் நன்றி கூறுகின்றனர்.

### முரசொலி முதுநிலை

# பிழைதிருத்துநர் ஜெ.டி.அரசு மறைவு!

சென்னை, டிச.11-

முரசொலி நாளிதழில் ஆசிரியர் பிரிவில் முதுநிலை பிழைதிருத்துநராக பணிபுரிந்து வந்த ஜெ.டி. அரசு அவர்கள்உடல்நலக் குறைவால் நேற்று (10.12.2025) இரவு 10.30 மணியளவில் இயற்கையெய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

அன்னாரது இல்லம் பெருங்களத்தூரில் 7/12, ராமதாஸ் தெருவில் உள்ளது.

## கழகத்தினர் அஞ்சலி!



முரசொலி நாளிதழில் 01.04.1980 ஆம் ஆண்டு முதல் பிழைதிருத்துநர் பிரிவில் 30 வருடங்களுக்கு மேலாக பணிபுரிந்து ஒய்வு பெற்ற பிறகும் தொடர்ந்து ஆசிரியர் பிரிவில் முதுநிலை பிழைதிருத்துநராக பணியாற்றி வந்தார். 21.12.2021 அன்று திடீரென மூளையில் ஏற்பட்ட ரத்தக் கசிவால் உடல்நலக் குறைவு ஏற்பட்டு கைகால் செயலிழந்து சிகிச்சை பெற்று வந்தார் ஜெ.டி.அரசு அவர்கள்.

இவருடைய தந்தை சி.என்.ஜெயவேல் அவர்கள் முரசொலி நாளிதழில் 15 வருடங்களுக்கு மேலாக பணியாற்றி வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

அன்னாரது மறைவு செய்தி அறிந்து கழகத்தினர், முரசொலி அலுவலர்கள் அஞ்சலி செலுத்தினர்.



மேயர் ஆர்.பிரியா, நேற்று (10.12.2025) டிட்வா புயல் மழையின் காரணமாக, ஓட்டேரி, ஸ்ட்ராஹன்ஸ் சாலை சந்திப்பில் உள்ள உணவகக் கடைகளின் மேற்கூரை இடிந்து விழுந்ததில் காயம் ஏற்பட்டு கீழ்ப்பாக்கம் அரசு பொது மருத்துவமனையில் சிகிச்சை பெற்று குணமடைந்த மூன்று நபர்களுக்கு நிவாரணத் தொகையாக தலா ரூ.5400/– வீதம் காசோலையினை ரிப்பன் கட்டட அலுவலகத்தில் வழங்கினார். இந்நிகழ்வின்போது, புரசைவாக்கம் வட்டாட்சியர் குப்பம்மாள் இராமு மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.